www.tamilarangam.net

# 'வெளிநாடுகள் கொடுத்த 16000 கூடாரங்களில் பன்னிரண்டைக்கூட மட்டக்களப்பில் காணோம்!

## லண்டன் நியூஸ்டேட்ஸ்மன் செய்தி ஆசிரியர் அறிக்கை!

பிரித்தானியாவிலுள்ள ஈழத் தமிழர் விடுதலை நிறுவனத்தின் பணிகளின் பயனாக, வரலாறுகாணாத பயங்கரச் சூறாவளியினாலே பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை மக்களின் புனர்வாழ்விற்கான இயக்கமொன்று லண்டனில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜனவரித் திங்கள் ஆறும் நாள் பிரித்தானிய சம்பிரதாயப் படியான இராப்போசன விருந்தை அடுத்து நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றிலே மட்டக்களப்புத் தமிழரின் புனர்வாழ்விற்கும் அவர்களின் விமோசனத்திற்கும் உதவக்கூடிய வகையில் நிதி சேகரிப்பதற்கும் திட்டங்கள் தீட்டுவதற்கும் அணி திரட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நூற்றுக் கணக்கான தமிழர்கள் வீதிகளிலெல்லாம் பனிக்கட்டி உறைந்திருந்ததையும் பொருட்படுத்தாது வந்து மத்திய லண்டன் Connaught Room இல் கூடினார்கள். அரசியற் கட்சிகளையும் பிரபல தொழிற் சங்கங்களையும் பத்திரிகை நிறுவனங்களையும் கூட்டுறவு இயக்கத்தையுஞ் சேர்ந்த ஆங்கிலேயர்கள் கூட்டத்திலே பங்கு பற்றினார்கள். கண்ணியத்திற்கும், நிதானத்திற்கும் உலகப் பிரசித்தி பெற்றதான 'கார்டியன்' பத்திரிகை நிறுவனத்தின் பிரதிநிதியான மார்டின் வாக்கர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். வரவேற்புரை நிகழ்த்திய முன்னைநாள் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி நித்தியானந்தன் மிகவும் உருக்கமான முறையிலே அவலப்பட்ட மக்களின் பரிதாபகர நிலையை விளக்கி அவர்களுக்கு ஆதரவு அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

பிரித்தானிய சோசலிச இயக்கத்தின் குரலான 'நியூஸ்டேட்ஸ்மன்' பத்திரிகையின் வெளிநாட்டுச் செய்தி ஆசிரியரான கிறிஸ்டோபர் ஹிச்சின்ஸ், ' பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டார். இவர் ஈழநாட்டிற்குச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளிலே இருவாரங்களாக நேரடியாக நிலைமைகளை அவதானித்துவிட்டு மீண்டதும் சூறாவளியின் சேதங்களைப்பற்றி ஒரு நீளமான அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். அவர் அளித்த செய்திகள் கூட்டத்தினரை நடுங்கவைத்தன. வியாட்நாமிலும், மத்திய கிழக்கிலும், சைப்பிரசிலும் தென்னமெரிக்காவிலும் உள்ள அகதிமுகாங்களிலெல்லாம் காணாத பரிதாபகரமான நிலையிலுள்ள மக்களைக் கிழக்கிலங்கையிலே தாம் கண்டதாகக் கூறினார். நிலைமைகளை விபரித்தபோது நாவெழாது குரல் கெட்டு அவர் தத்தளித்தமையைக் காண முடிந்தது.

தார்மீகஅரசாங்கமென்று தன்னைப் புகழ்ந்து கொள்ளும் ஜே. ஆர். அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்கள் மீது கடைப்பிடிக்கும் கொள்கையானது தன்னாற் புரிந்து கொள்ள முடியாத விநோதமாக உள்ளது என்றும் அவர் கூறினார். கவிற்சர்லாந்து அரசாங்கம் சூறாவளி பற்றிய செய்திகளைப் படித்து ஒரு விமானத்தில்பால்மாப்புட்டிகளை நிறைத்து அனுப்பியிருந்தும் அவை எதுவுமே கிழக்கிலங்கையிலே வழங்கப்படவில்லை என்றும் கொழும்புப் பேட்டை தெருவோரங்களிலேதகள்ள விலைக்கு அவை விற்கப்படுகின்றன என்றும் கூறினார். பதினாயிரங் கூடாரங்களை வெளிநாட்டு அரசாங்கங்கள் அகதிகளுக்காக வழங்கியிருந்தும் 12 கூடாரங்களைத் தன்னும் தன்னாலே மட்டக்களப்பிலே பார்க்க முடியவில்லை என்று அவர் ஏங்கினார்.

அடுத்துப் பேசிய ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியின் நிறுவனமாகிய 'லிபரேஷன்' பிரதிநிதி டோனி கில்பர்ட் தொழிற்கட்சியின் இடது சாரி இயக்கங்களினதும், தொழிலாளர் இயக்கத்தினதும் ஆதரவைத் தான் திரட்டப்போவதாக உறுதியளித்தார். ஒரு தலைமுறையாக சிறுபான்மையினர் என்ற காரணத்தினாலே படிப்படியாக தமது அடிப்படை உரிமைகளையும் நிலங்களையும் பறிகொடுத்துவந்த அப்பாவி மக்கள், தம்மைத் தாமே உயர்த்திக் கொள்வதற்குக் கதியற்ற மக்கள் இயற்கையினாலே வஞ்சிக்கப்பட்டமை மிகவும் பரிதாபமானது என்றும் கூறப்பட்டது.

அகதிகளுக்கென இலங்கை அரசாங்கத்திடம் நன்கொடையாகக் கொடுக்கப்படும் பொருட்களை அகதிகளின் தேவைகளுக்கே பயன்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வேண்டுமாறும் உலக நாடுகளிடையே பிரச்சாரம்செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக ஒரு தேசிய பணசேரிப்பு அமைப்பு நிறுவப்படும். இதைப் பிரித்தானிய நிறுவனங்கள் கண்காணித்தாலும், இலங்கையில் நல்லமுறையில் அமுல் நடத்தக் கூடிய நிறுவனங்களையும் அவதானிக்க விரைவில் பிரித்தானிய பாராளுமன்ற அங்கத்தவர்கள் இருவர் செல்லவிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

முடிவில் நன்றியுரை கூறிய பேராசிரியர் ஆறுமுகம் தனக்கே உரியதான சொற்பாணியிலே பங்குபற்றியோருக்கும் ஆதரவளிக்க முன்வந்த இயக்கங்களுக்கும் பாராட்டுக்கூறி ஈழத்தமிழர் ஓராண்டுக்குள் இரு தடவைகள் அகதிகளானமை பற்றி விளக்கினார்.

— லண்டன் முரசு (14-1-79)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்